# கிழக்கு மாகாண முஸ்லிம் பெண்களின் கல்வி நிலை - விசேட ஆய்வு கோரளைப்பற்று மேற்கு-

**A.R.F. Begum**

*Department of Arabic Language, South Eastern University of Sri Lanka*

*begum.rahman@gmail.com*

***ஆய்வுச்சுருக்கம்***

*பெண்களின் நிலைகளில் இன்று சமத்துவ உரிமைகள் என்கின்ற எண்ணக்கருவினூடாக அவர்கள் தங்களுடைய நிலையில் இருந்தும் பல்வேறுபட்ட முன்னேற்றங்களை அடைந்து கொண்டுதான் இருக்கின்றார்கள் என்பதற்கு இன்றைய பொது வாழ்க்கையில் அவர்களுடைய பங்களிப்பினூடாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆரம்ப கால பெண்களின் செயற்பாடுகளுடன் இன்றைய பெண்களினுடைய செயற்பாடுகளை உற்று நோக்குகின்றபோது இத்தகைய நிலையினை காணக்கூடியதாக இருக்கின்றது. 1947 ஆம் ஆண்டு இலங்கையில் இலவசக்கல்வி (Free Education ) அறிமுகப்படுத்தப்பட்டதனை அடுத்து பெண்களில் கல்வி கற்கும் வீதம் இலங்கையில் அதிகரிக்கப்பட்டமை ஓர் முக்கியமான விடயமாகும். குறிப்பாக இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமையானது பெண்களின் கல்வி நிலையில் மாற்றத்தை ஏற்படுத்திய போதிலும் முஸ்லிம் பெண்களுடைய கல்வி நிலையையில் பாரிய மாற்றங்களை காணக்கூடியதாக இருக்கவில்லை. இலங்கையில் கல்வி முறைமையினை நோக்கும் போது ஆரம்ப கல்வி தொடக்கம் சாதாரண உயர்தரம் வரையான கல்வியே பிரதானமாக நோக்கப்படுகின்றது. இலங்கை வரலாற்றில் பெண்களுடைய பொது வாழ்கை (Public Life) பங்குபற்றுதலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தில் பிரதான பங்கினை அவர்களுடைய கல்வி நிலை பெற்று விளங்குகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழுகின்ற கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக இஸ்லாமிய கலாசார விழுமியங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்ற பிரதேசமாக காணப்படுவதுடன் இங்கு முஸ்லிம் மக்கள் தங்களுடைய அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடுவதில் அல்லது ஏனைய விடயங்களுக்கும் வேறுபட்ட மத கலாசார இடையூறுகள் அற்ற பிரதேசமாக விளங்குவதனால் இங்கு பெண்களின் கல்வி விடயங்களுக்கு ஏனைய சமூக ரீதியான தடைகள் காணப்படவில்லை என்றே குறிப்பிட வேண்டும். மாறாக இவர்களது கல்வி நிலையை பெற்றுக்கொள்வதிவ் எத்தகைய அம்சங்கள் தடையாக அமைந்தது என்பதனை ஆராய்வதாகவே இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்விற்குரிய ஆய்வு*

*பிரதேசமாக கிழக்கு மாகாணத்தின் கோரளைப்பற்று மேற்கு பகுதியினை அடிப்படையாகக்கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்விற்கான தகவல்கைளை பெற்றுக்கொள்வதற்காக ஆய்வு முறைமையாக பண்புசார் முறைமையில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை பெற்றுக்கொள்வதனை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு முறைமை அமைகின்றது. முதலாம் நிலைத்தரவுகளில் நேர்காணல் முறைமையானது இரு வேறுபட்ட குழுக்களுக்கிடையில் அமைந்தது. அதாவது முதலாம் குழுவில் 35-25 வயதிற்குற்பட்ட பெண்கள் மற்றும் 20-35 வயதிற்குற்பட்ட பெண்கள் என்று இருவித குழுக்களை கருத்திற்கொண்டே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக முதலாம் நிலைத்தரவில் நேர்காணல் கலந்துரையாடல் போன்ற முறைமைகளை பயன்படுத்துவதுடன் இரண்டாம் நிலைத்தரவில் நூற்கள் மற்றும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கைகள் என்பவற்றினூடாகவே தரவுகளை பெறக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக இப்பகுதியில் வாழுகின்ற பெண்களுடைய கல்வி நிலையிலும் விட அவர்களது சொந்த திருமண வாழ்வில் கவனம் செலுத்துகின்ற பெற்றோர்களாகவே அதிகம் காணப்பட்டனர். அதுமாத்திரமன்றி இப்பகுதி வாழ் மக்கள் பெண்களுக்கு வீடு கட்டுதல் நகைகளை சேகரித்தல் என்பதில் காட்டப்பட்ட அக்கறையினை அவர்களுடைய கல்வியில் காட்டத்தவறிவிட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.*

***கலைச்சொற்கள்:*** *இலவசக்கல்வி, பொதுவாழ்க்கை, இஸ்லாமிய கலாசாரம், பெண்களின் கல்வி*

## அறிமுகம்

இலங்கை வரலாற்றை நோக்குகின்றபோது யாவருக்கும் கல்வி என்கின்ற அடிப்படையில் ஆரம்ப கல்வி தொடக்கம் உயர்கல்வியினை தொடர்வது வரைக்கும் இலவசக்கல்வியினை அறிமுகப்படுத்தி இலங்கையர்களுக்கு சிறந்த கல்வி வாய்ப்பினை வழங்கி இருக்கின்றது. அவ்வகையில் இன, மத, கலாசார மற்றும் பால்நிலை பாகுபாடுகள் இன்றி அனைத்து மக்களும் தாங்கள் விரும்பிய துறையில் கல்வியினை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை காணப்படுவதனால் இன்று அனைவரும் தங்களது கல்வி உரிமைகளை பெற்றுக்கொள்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அவ்வாறாக நோக்குகின்றபோது பல சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட காரணங்களின் அடிப்படையில் கல்வி உரிமையினை சரியான முறையில் பெற்றுக்கொள்ள முடியாதவர்களும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்க

பொதுவாக இலவசக்கல்வியினை பெற்றுக்கொள்ள முடியாமைக்கு அல்லது கல்வியினை தொடர முடியாமைக்கு இருக்கின்ற பிரதான காரணம் அவர்களது பொருளாதார நெருக்கடிகளே பிரதான இடத்தினை வகிக்கினறது. அவ்வகையில் கல்வி கற்கும் வயதில் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுகின்ற நிலையானது அவர்களது குடும்ப சுமையினை குறைப்பதற்கு அவர்களால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கையாகவே அமைகின்றது. அது

மாத்திரமன்றி இத்தகைய இலவசக்கல்வியினை பெற்றுக்கொள்வதற்கு அரசாங்க தரப்பில் இருந்து எத்தகைய நெருக்கடிகளும் ஏற்படாத பட்சத்தில் மதரீதியான மற்றும் கலாசார ரீதியான விடயங்கள் பாரிய அளவில் செல்வாக்கு செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பொதுவான கண்ணோட்டத்தில் நோக்குகின்றபோது பெண்களுக்கான கல்வி என்கின்ற விடயம் வருகின்ற பட்சத்தில் அநேகமான பெற்றோர்கள் பெண்களுக்கு கல்வி கற்பதனை விட அவர்களுக்கு தையல், சமையல் போன்ற விடயங்களில் சிறந்த இயலுமை இருந்தால் போதும் என்கின்ற மனோபாங்குடைய பெற்றோர்களே அதிகம். இத்தகைய நிலையில் அநேகமான பெண்கள் தங்களுடைய கல்வி கற்கும் வாய்ப்பினை இழந்து விடுகின்றனர். அண்மைக்காலங்களில் இந்நிலையில் மாற்றங்கள் வந்தபோதிலும் மதம் மற்றும் கலாச்சார செல்வாக்கு முறைமை முற்றாக மாற்றம் பெற்று விட்டது என்று கூறுவதற்கும் இல்லை. கல்வியினை கலாசார விழுமியங்களுடன் கற்று வெற்றி கண்டவர்கள் ஏராளம்.

## ஆய்வுப் பிரச்சினை

இப்பிரதேசத்தில் வாழுகின்ற முஸ்லிம் பெண்கள் தங்களுடையகல்வி செயற்பாடுகளை மேற் கொள்வதில் எத்தகைய சவால்களை எதிர் கொண்டனர்? என்பதனை ஆராய்வதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வு முறைமை

இவ்வாய்வில் பிரதான பங்கினை முதலாம் நிலைத்தரவுகளில் தங்கி இருப்பதனால் முதலாம் நிலைத்தரவுகள் மிகவும் ஆழமான ஆய்வினை மேற்கொள்ள வேண்டிய அவசியம் காணப்பட்டது. எனவே முதலாம் நிலைத்தரவுகளில் நேர்காணல் குழு கலந்துரையாடல் என்பவற்றிற்கு அதி முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அவ்வகையில் நேர்காணலில் குறிப்பாக திருமணம் முடித்த பெண்கள் மற்றும் திருமணம் முடித்த தொழில் செய்கின்ற பெண்கள் ஆய்விற்கு உற்படுத்தப்பட்டனர். இதில் இவ்விரு பிரிவினிலும் 25 பெண்கள் வீதம் 50 பெண்களை ஆய்விற்கு உற்படுத்தப்பட்டப்பட்டனர்.குறிப்பாக இவ்வாய்வில் பிரதாக வகிபங்கினை பெண்கள் பெற்றிருந்ததுடன் ஆய்வில் 30 வயதிற்கும் 45 வயதிற்கும் உற்பட்ட பெண்களே ஆய்வில் உள்வாங்கப்பட்டனர்.

## ஆய்வின் நோக்கம்

- முஸ்லிம் பெண்களின் கல்வி கற்பதில் காணப்படுகின்ற பிரச்சினைகளை இணங்காணல்

- பெண்களினது ஆளுமை விருத்தியில் கல்வியின் அவசியத்தை புரிந்து கொள்ளுதல்
- இப்பிரதேசத்தில் சமூக செயற்பாடுகளில் பெண்களினது பங்குபற்றல் தன்மையானது எத்தகைய நிலையில் காணப்படுகின்றது என்பதனை அறிதல்

## கண்டுபிடிப்புக்கள்

- **குடும்பத்தில் நிலவிய பொருளதார சிக்கல் நிலை**

பெண் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி அவர்களுக்கு கல்வியினை வழங்குவதற்கு அன்று பெற்றோர்கள் கூடுதலான ஆர்வத்தினை காட்டவில்லை குறிப்பாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதனை விரும்பியதனை காட்டிலும் ஆண் பிள்ளைகளுக்கு அத்தகைய முக்கியத்துவத்தினை வழங்கியதுடன் பெண் பிள்ளைகளும் கல்வி கற்க சென்றால் பொருதார சிக்கல்கள் ஏற்படுதுடன் பெண் பிள்ளைகளை கற்பிப்பதற்கு போதிய நிதி வசதிகளும் காணப்படவில்லை என்று குறிப்பிடலாம். மாறாக பாரிய க'டங்களுக்கு மத்தியிலும் ஆண்களை வைத்தியராகவும் பொறியியலாளராகவும் உருவாக்குவதில் பெற்றோர்கள் ஆர்வம் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

- **யுத்தச்சூழல் மற்றும் கிராமிய சூழல்**

ஆய்விற்குற்பட்ட பெண்களின் கல்வி கற்கும் காலப்பகுதியில் உள்நாட்ட யுத்த சூழல் காணப்பட்டமையினால் அவர்களுக்கு பாடசாலை செல்வதற்குரிய நிலைமை காணப்படவில்லை அத்துடன் இக்காலப்பகுதில் பெரும்பாலான குடும்பத்தில் இருந்த ஆண் சிறுவர்களை வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி அவர்களுக்கு கற்பதற்குரிய சந்தர்ப்பம் காணப்பட்டது போல் பெண்களுக்கு காணப்படவில்லை. அத்துடன் இப்பகுதியில் கிராமிய சூழல் காணப்பட்டதுடன் பெற்றோர்களும் பாரம்பரிய விடயங்களுக்கு அதிக ஆர்வம் காட்டியமையினாலும் அவை பெண்களின் பாடசாலை கல்வியினை பெற்றுக்கொள்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டது. அதுமாத்திரமன்றி பெண்பிள்ளைகளை வெளியில் அனுப்புவதில் காணப்பட்ட ஒரு சில மூட நம்பிக்கைகள் மற்றும் அவர்களுடைய பாதுகாப்பு பிரச்சினை போன்ற காரணங்களினால் அவர்களுடைய கல்வியினை இடையில் நிறுத்தி விடுவதே அதிகம்.

- **கலாச்சார விழுமியங்களை அதி தீவிரமாக பின்பற்றப்பட்டமை**

திருமண வாழ்விற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் ஆர்வம் காட்டுகின்ற பெற்றோர்களே அதிகமாக இருந்தனர். குறிப்பாக இவர்கள் கல்வியிற்காக பணம் செலவிடுவதனை காட்டிலும் பெண் பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்கால வாழ்க்கை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்கின்ற நோக்கில் வீடுகளை கட்டுவதற்கு அதி முக்கியத்துவம் காட்டினர். அதுமாத்திரமன்றி கலாச்சார விழுமியங்கள் என்கின்ற பெயரில்

பெண் பிள்ளைகளை கல்வி கற்பதற்குரிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுப்பதில் இருந்தும் தவறி அவர்களை இஸ்லாமிய சூழலிற்குள் உற்படுத்துவதாக கருதி பெண் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டிய கல்வியினை வழங்குவதற்கு மறுக்கப்பட்டது என்பதே உன்மை.இது இஸ்லாமிய கலாசார விழுமியங்கள் தொடர்பாக காணப்பட்ட தெளிவான புரிந்துணர்வு அக்கால பெற்றோரிடம் காணப்படவில்லை என்பதே உண்மை.

- **கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக போதிய விழிப்புணர்வு காணப்படாமை.**

இக்காலப்பகுதியில் பெற்றோர்கள் கல்வி கற்பதன் முக்கியத்துவத்தினை போதிய அளவு அறிந்து இருக்கவில்லை என்கின்ற பாரிய ஒரு குறைபாடு காணப்பட்டது மாத்திரமன்றி பெண் பிள்ளைகளை வெளி இடங்களுக்கு சென்று கல்வி கற்க வாய்ப்புக்கள் வந்தபோதிலும் ஒரு சில பெற்றோர்கள் வீட்டை விட்டும் அவர்களை தூரமாக்குவதனை விரும்பாததுடன் பெண்கள் திருமணம் முடிக்கும் வரை பெற்றோர்களின் கண்காணிப்பில் இருப்பது அவசியம் என்கின்ற கொள்கையில் பெற்றோர்கள் இருந்தனர்.

- **பெற்றோர்களுக்கு ஆதரவாக இருப்பதில் அக்கறை காட்டியமை.**

பெற்றோர்களுக்கு உதவியாக அவர்களுடைய வேலைகளை செய்து அவர்களுக்கு பக்கபலமாக இருப்பதற்கு அதிகமான ஆர்வத்தினை காட்டி வந்தனர்.அது மாத்திரமன்றி பாடசாலை கல்வியில் போதிய ஆர்வம் காட்டுவதற்கு பெண் பிள்ளைகளும் தவறி விட்டனர் என்றே குறிப்பிட வேண்டும். அத்துடன் சிறு தொழில் வியாபார நடவடிக்கைகளில் இவர்கள் பெற்றோர்களுக்கு பக்கபலமாக இருந்து வந்தமை அவர்களுடைய கல்வியினை அவர்களால் தொடர்வதற்கு முடியாது போனது.

## துணை நூற்கள்


1. Amin, Sonia Nishat,(1996), The World of Muslim Women in Colonial Bengal, Leiden.
2. Bhargava, M., Dutta, K.,(2005), Women, Education and Politics, Oxford University Press.
3. Minakshi, Mehta. S., (2006), Empowering Rural Women, Anmol Publication, New Delhi.
4. Sharma, S.P., (2006), Women Education and Women Rights in India, Vista International Publishing House New Delhi.
5. Sharma, S, Ram, (1995), Women and Education, 3 Vols., Discovery Publishing House, New Delhi.